Nallur Branch Library

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 18 ஆவணி 26 முஹர 6 இதழ் 213

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11-9-1986

## மட்டக்களப்பில் விவசாயிகள் மீது—— துப்பாக்கிப் பிரயோகம்! பலர் பலி என அச்சம்!

[மட்டக்களப்பு நிருபர்]

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பூமரச்சோலை வயல் வெளியில் விவசாய உற்பத்தி வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது ஆயுதப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் பலர் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது!

பூமரச்சோலை வயல்வெளியில் விவசாய வேலைகளில் பத்துக்கு மேற்பட்டோர் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்இவ் வயல்வெளிப் பகுதியில் உள்ள வீதி வழியாக ஆயுதப்படையினர் ரோந்து சென்றசமயயம் விவசாயிகளை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் அச்சமயம் விவசாயிகள் காட்டுப் பகுதியை நோக்கி ஓடினர். அப்பொழுது அக் காட்டுக்குள்ளும் பதுங்கியிருந்த ஆயுதப்படையினர் அவர்களை நோக்கி துப்பாக்கிகளால் சுட்டனர் இதில் பலர் கொல்லப்பட்டதுடன் சிலர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [மா]

# ● நிஜமாகப் பாதிக்கப்பட்ட வெளிநாட்டு அகதிகளுக்கு ஜேர்மனியில் அரசியல்தஞ்சம்

## அதிபர் ஹெல்மட்கோல் அறிவிப்பு

(பொன்)

"மேற்கு ஜெர்மனியில் உள்ள அகதிகளில் நிஜமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிச்சயம் அரசியல் புகலிடம் வழங்கப்படும்" என்று மே. ஜெர்மன் அதிபர் திரு ஹெல்மட் கோல் தெரிவித்துள்ளார்.

மேற்கு ஜெர்மன் நகரான பொன்னில் அண்மையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாடொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

திரு கோல் மேலும் கூறியதாவது

"மேற்கு ஜெர்மனியிலுள்ள அகதிகளில் அரசியல் புகலிடம் கோருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

கடந்த ஜூனில் இத்தொகை 7,340 ஆகவும், ஜூலையில் 9,710 ஆகவும் அதிகரித்துக் காணப்பட்டுள்ளது. இந்நிலையில் இத்தொகை அதிகரித்துச் செல்லுமானால் விரைவில் எமது நாட்டில் அரசியல் தஞ்சம் கோருவோர் தொகை ஒருலட்சத்துக்குமதிகமாகிவிடும்.

ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளைவிட மேற்கு ஜெர்மனியே கூடுதலானளவு அகதிகளைக் கொண்டுள்ளது.

எமது நாடு நிஜமாகப் பாதிக்கப்பட்ட எந்த ஒரு அகதிக்கும் அரசியல் புகலிடம் வழங்கும் நாடாகத் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

எமது நாட்டின் அரசியலமைப்பின் ஸ்தாபகர்களும் நிஜமாகப் பாதிக்கப்பட்ட வெளிநாட்டு அகதிகளுக்கு அரசியல் புகலிடம் வழங்குவதை வலியுறுத்தியுள்ளனர் எனவே அரசியலமைப்பில் உள்ள சட்டத்திற்கமைய நிஜமான அகதிகளுக்கு நாம் என்றும் அரசியல் தஞ்சம் வழங்குவோம்.

குறிப்பாக மூன்றும் உலக நாடுகளிலிருந்தும் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நாம்அரசியல் புகலிடம் வழங்குவதில்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொக்காவில் முகாம் அருகே முகமூடி நபர்கள் கொள்ளை

நமது நிருபர்]

கொக்காவில் இராணுவ முகாமுக்கு அண்மையில் முகமூடி அணிந்த இருவர் துப்பாக்கி முனையில் போக்குவரத்துச் சேவையிலீடுபட்டிருந்த வாகனங்களில் கொள்ளையடித்துள்ளனர்.

நேற்றுக்காலைஇக்கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது.

இச்சம்பவநேரம் இவ்வீதியிலுள்ள இக்காட்டுப்பகுதியில் இராணுவத்தினர் பதுங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்துச் சேவையிலீடுபட்டிருந்த வாகனங்களில் உள்ள பிரயாணிகளின் நகைகள், ரொக்கப்பணம் மற்றும் உடைமைகள் அனைத்தும் இந்த முகமூடி அணிந்த நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [மா]

## மாங்குளத்தில் விநாயகர் சிலை படையினரால் சேதம்

வவனியா, புதன்

மாங்குளம் மாவடிப்பிள்ளையார் கோவிலின் உற்சவமூர்த்தி சிலை ஆயுதப்படையினரால் எடுத்துச் செல்லப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் இவ் ஆலயத்தில் அன்னதான வைபவம் இடம்பெற்றது. அச்சமயம் அங்கு வந்த ஆயுதப்படையினர் கோயில் குருக்களையும், அடியார்களையும் தாக்கிவிட்டு கோயிலுக்குள்ளே புகுந்து இந்த சிலையை வெளியே எடுத்துச்சென்று சேதப்படுத்

(4ம் பக்கம் பார்க்க)

## திருமலை திடீர் முற்றுகை: மூவர் சுடப்பட்டு மரணம்

மூதூர் நிருபர்]

திருமலை நகர்ப் பகுதியைத் திடீரெனச் சுற்றிவளைத்துதேடுதல் வேட்டை நடத்திய இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 3 பேர் பலியானார்கள். மேலும் 400 பேர் கைது செய்யப்பட்டு லவ்லேன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இவர்கள் பொலிஸ் விசாரணையின் போது அநாமதேய தலையாட்டி நபர் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர். இதனைத் தொடர்ந்து 100 பேர் தடுத்து வைக்கப்பட்டதுடன் ஏனையோர் விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை இச்சம்பவம் நடைபெற்றது.

அன்புவழிபுரம், அல்லைத்தோட்டம், செல்வநாயகபுரம் ஆகிய பகுதிகளிலேயே நேற்று அதிகாலை தேடுதல் வேட்டை

(4-ம் பக்கம் பார்க்க)

## ராஜீவுக்கு நிக்கரகுவா 'உயர்விருது'

புதுடில்லி, செப் 10

நிக்கரகுவா வின் 'அகஸ்ரோ சீஸர் சாந்திநோ ஓடர்' என்ற மிக உயர்விருது பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்திக்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிக்கரகுவா அதிபர் திரு. டானியல் ஓர்ட்டேகா இன்று ஜனாதிபதி மாளிகையில் இதனை திரு ராஜீவுக்குவழங்கி கௌரவித்தார். (சி)

## வட இலங்கை தனியார்—— மருத்துவகல்லூரி விவகாரம்: ஆளுநர் குழு விளக்கம்

யாழ்ப்பாணம், வியா

வட இலங்கைத் தனியார் மருத்துவர்கள்கல்லூரிதொடர்பாகக் கடந்த ஒன்பதாந் திகதி வெளியான செய்தி குறித்து இக்கல்லூரியின் ஆளுநர் குழுச் செயலாளர்கள் இணைந்து விடுத்துள்ள அறிக்கை விபரம் வருமாறு!

வட இலங்கை மருத்துவக் கல்லூரியை அங்கீகரிக்கும் படி கோரிப் பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு இது வரை முறையான விண்ணப்பம் எதுவும் அனுப்பப்படவில்லை. ஏனெனில் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் செயலர் 17-3-86 திகதியிட்டு ஆளுனர்குழு கௌரவச் செயலர்களான டாக்டர் ஜே.பி.சி.

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ் மாவட்ட கலாசார பேரவை இசை விழா

சுண்டுக்குளி, வியாழன்

யாழ். மாவட்ட கலாசார பேரவை ஆதரவில் நடைபெறும் ஐந்து நாள் இசை விழா நாளை வெள்ளிக்கிழமை 12ம் திகதி நல்லை ஆதீனத்தில் ஆரம்பமாகிறது.

4ம் பக்கம் பார்க்க)

## மாங்குளம் முகாமில் 'கரடித்' துன்புறுத்தல்

வவனியா. புதன்,

மாங்குளம் இராணுவ முகாமில் கரடியொன்று வளர்க்கப்பட்டு வருகிறது. இந்த முகாமில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைத்துள்ள இளைஞர்கள் மீது இந்தக்கரடியைப் பாயவிட்டு சித்திரவதை மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன்இராணுவத்தினர் தேடுதல் வேட்டைக்கு செல்லும்போது இந்தக்கரடியையும் தம்முடன் அழைத்துச்செல்கின்றனர் எனவும் கூறப்படுகிறது.

சந்தேகநபர் ஒருவரை அவரது வீட்டிற்கு தேடிச்செல்லும் இராணுவத்தினர் இந்தக் கரடியை முன்னே அனுப்பிவிட்டு தாம் அதன்பின் செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறதுடது. (ஒ)

## யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் ஹோட்டலில் புகலிடம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி விடுதியில் தங்கியிருந்த வார்ட் பொறுப்பாளர்களான சுமார் 30 டாக்டர்கள் அவ்விடுதியில் தங்குவதற்கு மறுத்து யாழ். சுபாஸ் ஹோட்டலில் சென்று தங்கியுள்ளனர்.

நேற்றுமுதல் இவர்கள் சுபாஸ் விடுதியில் தங்கிவருகின்றனர்.

யாழ் ஆஸ்பத்திரி டாக்டர்கள் விடுதியில் ஷெல் விழுந்து சேதம் ஏற்பட்டதனாலும், அடிக்கடி ஆஸ்பத்திரியில் ஷெல்கள் வந்து விழ்வதுமே இதற்குக் காரணமெனத்தெரிகிறது.

ஆண், பெண் டாக்டர்கள் இரு பாலாரும் ஆஸ்பத்திரி விடுதியைவிட்டுசுபாஸ்ஹோட்டலில் தங்கிவருகின்றனர். (ச)

## யாழ் மாவட்டத்துக்கு 'ஜெய்ப்பூர்' கால்கள்

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்டத்தில் கால்களை இழந்துதவிப்பவர்களுக்கு "ஜெய்பூர் பாதம்" என்னும் செயற்கைக் கால்களை வழங்குவதற்கு கொழும்பு நண்பர்கள் சங்கம் முன்வந்துள்ளது.

யாழ். சமூகசேவைப் பகுதியினர் இச்சங்கத்தின் உதவியுடன் தற்பொழுது கால்களை இழந்த அநேகருக்கு இப்பாதங்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

27 சிறி தொடர் இலக்கம் கொண்ட ஆஸ்டின் லொறி விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. பரமநாதர், ஆலடி, காரைநகர். [C 4549]

நல்ல நிலையிலுள்ள 86 ஸ்ரீ Honda MB-8 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: நித்தியானந்தம், 131/4, பருத்தித்துறை வீதி, நல்லூர். (நூல் நிலைய அருகாமையிலுள்ள ஒழுங்கை) (C 4554)

மைசூர் அரிசி நம்பர்-1 கசிவில்லாதது, சுத்தமானது, தரமானது, சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

தெல்லிப்பழையில் சகாய விற்பனை. தெல்லிப்பழை துர்க்காதேவி தேர்த்திருவிழா/ தீர்த்தத்திருவிழா 14-9-86/ 15-9-86 மில்க்வைற் விளம்பர வாகனத்தில் ரூ. 15/-ற்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம், அபிராமி அந்தாதி, சரஸ்வதி ஸ்ரிக்கர், அறிவு நூல்களும் பொலித்தீன் பாக்கும் அன்பளிப்பாக வழங்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுகொள்ளலாம். —மில்க்வைற், யாழ்ப்பாணம். (A 1256)

## தேவை

தையல் வேலை தெரிந்த ரெய்லர் உடன் தேவை. தொடர்பு: ராதா ரெய்லறிங், பிரதான வீதி, அச்சுவேலி. C 4520

ஆங்கிலம், தமிழ் அச்சுக் கோர்ப்பவர்கள் தேவை. குறைந்தகால அனுபவம் உள்ளவர்களின் விண்ணப்பங்களும் ஏற்கப்படும். நடைமுறை ஊதியம், சகாயநிதி செலுத்தப்படும். இல. 6 குமார வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். (C-4480)

மின்தறி நெசவாளர்கள் (பெண்கள்) மின்தறியில் அனுபவமுள்ளவர்களும், யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவரும் விரும்பத்தக்கது. மற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ராஜ்கோபால்ஸ், 47, பெரிய கடை, யாழ்ப்பாணம் [C4544]




(A 1041)

### சேவை

தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: Fudo Enterprises மின்சார நிலைய வீதி, (3ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம். Branch: Jaffna Road, Manipay (Siva Studio - Bitsman அருகாமையில்) C 4507

### WANTED

Wanted Immediately Welder Cum Blacksmith to Handle GIron rills aud Gates. Salary Negotiable Call Over. Before 20th Instant Rajan Iron Works, 8, Stanley Road, Jaffna. (C 4541)

## தேவை

108, Brown Road, Jaffna A/L 87 இரசாயனம் ஆசிரியர் - சத்தீஸ், ஆரம்பம்: 13-09-86 சனி 3-30 p.m. வகுப்பு நேரங்கள்: சனி, ஞாயிறு 2-30 p.m - 3-30 p.m and 3-30 p.m. - 4-30 p.m [C-4404]

கரவெட்டி மொடேன் எடியுகேசன் சென்ரரில் க. பொ. த. [உயர்] 87-ம் ஆண்டு பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு கலை / வர்த்தக / விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. [C-4412]

Radio, T. V., வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம் 13-9-86-ல் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. விரும்பியோர் தொடர்பு கொள்ளவும்: Vispa Engineering Aid Hall, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 4540

## தவறிவிட்டது

அராலி வடக்கைச் சேர்ந்த திரு. அப்புக்குட்டி வேலாயுதர் அவர்களுக்குச் சொந்தமான மக்கள் வங்கி காசோலைப் புத்தகமும், வர்த்தக வங்கி சேவிங் புத்தகமும், வெளிநாட்டுக்கா சோலையும் மார்க்கண்டு என்பவரின் பெயரில் உள்ள 25 Sri 9108 இலக்க ராக்ரர் புத்தகமும், 1986 லைசென்ஸ் எடுப்பதற்குள்ள கச்சேரி உத்தரவுப் பத்திரங்களும், இன்சூரன்ஸ் புத்தகமும் கல்லுண்டாய்ரோட்டில் இருந்து வர்த்தக வங்கிக்கு போயடையும் இடைப்பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உரியவரிடம் அல்லது ஆஸ்பத்திரி வீதி சுந்தரமூர்த்தி அன்சனஸ் ஸ்தாபனத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். C 4546

## விற்பனை

படிமுறைக் கணிதப் பயிற்சி
7-ஆம் வருடம்
மூன்றும் தவணை
ஆலோசனை:
வி ச. சுப்பிரமணியம்
விலை: ரூபா 7-50
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [C 4547]

## பிறந்ததின வாழ்த்து



### செல்வன் மதிதாஸ்

மயிலிட்டி மதற்கு கட்டுவனைச் சேர்ந்த கந்தசாமி பவளராணி தம்பதிகளின் புதல்வன் மதிதாஸ் (11-09-86) இன்று தனது 3-வது பிறந்தநாளை 'கவிதா இல்லத்'தில் கொண்டாடுகிறார். இவரை அம்மம்மா, ஐயா, ஜெர்மன் அப்பா, கவிதா அக்கா, அண்ணா, சின்னக்கா, ஜெர்மன் பெரியப்பா, பெரியம்மா, தம்பி பிரஷாத், ஜெர்மன் பெரியமாமா அத்தை சின்னமாமா, பிரபுமாமா வவா அன்ரி, பாசம் சித்தி மற்றும் மாமா, மாமிமார், பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றனர். A 1253

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கோண்டாவில் கிழக்கு சிவப்பிரகாசம் சிவலிங்கம் என்பவரின் மரணசாதனமின்றி இறந்த மரணச்சொத்துக்கள் சம்பந்தமாக.

மரணமெய்தியவர்:
யாழ். இல. தத்துவம் /3984
சிவலிங்கம் கைம்பெண் கனகமணி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
மனுதார்.

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச்சொத்தைநிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு ஆடி மாதம் 7-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைந்தது:
த சண்முகராசா,
மனுதாரின்
சட்டத்தரணி. (C 4463)

## கூட்டங்கள் நடாத்தத் தடை

பண்டத்தரிப்பு, புதன் பிரான்பற்று பெரியவளவு ஆலயச் சுற்றுடலில் அரசியல் தொடர்பான கூட்டங்களையும், இயக்கங்கள் தொடர்பான கூட்டங்களையும் நடத்துவதற்கு தடை விதிப்பது என்று ஆலய பரிபாலனசபை தீர்மானித்துள்ளது.

ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் போதே இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## வலி கிழக்கு தெ.ப.ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

## வாடகைப் பந்தல் சேவை

மேற்படி எமது சங்கத்தில், தங்கள் இல்லங்களில் நடைபெறும் தருமணவிழா, ஏனைய நிகழ்ச்சிகளுக்காக சிறந்த பந்தல் அமைப்புக்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

கீழ்வரும் அளவுகள் உள்ள பந்தல் அமைப்பைக் குறைந்த கட்டணத்தில், வாடகைக்கு எமது சங்க வாகனம்மூலம் கொண்டுவந்து அமைத்துத் தர, தலைமைக் கந்தோரில் தொடர்பு கொள்ளவும், முற்பதிவுகள் செய்து எங்கள் சேவையை உறுதிப்படுத்தலாம்.

20' . 20' — 400 ச. அடி
20' . 30' — 600 ச. அடி
20' . 40' — 800 ச. அடி
20' . 50' — 1000 ச. அடி
20' . 60' — 1200 ச. அடி

பொதுமுகாமையாளர்.
நீர்வேலி. (A-1257)

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



### வே. ஐயாத்துரை ஜே. பி.

[இளைப்பாறிய ஆசிரியர்]

அன்னைமடியில்:
06-10-1910

இறைவனடியில்:
23-08-19 5

திதி:
11-09-1986

எங்கள் குடும்ப தலைவராகிய எமது அன்புத் தெய்வமே, நீங்கள் எம்மை விட்டு பிரிந்து ஓராண்டு ஆகியும் உங்கள் நினைவுகள் எமது மனதைவிட்டு அகலாது எம்மை வாட்டுகின்றது, உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'லட்சுமி வாசம்'
சங்கானை. C 4415

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



### சின்னத்தம்பி ஜெயந்திரன்

தோற்றம்: 10-09-1963
மறைவு: 11-09-1984
திதி: 11-09-1986

வவுனியாவில் VIP பஸ்ஸில் வைத்து பாதகர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட எங்கள் செல்வம் ஜெயந்திரனே நீர் எங்களை விட்டுப் பிரிந்து ஈராண்டு சென்றாலும் உம் நினைவு எங்களை விட்டு மறையாது

உமது பிரிவால் வாடும் தாய், சகோதர சகோதரிகள், மாமன்மார்கள், மற்றும் உறவினர்கள்.
கைதடி மேற்கு,
கைதடி. C 4553

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### தருமதி பாக்கியம் கணபதிப்பிள்ளை

அன்னைமடியில்:
20-08-1916
ஆண்டவன் திருவடியில்:
12-08-1986

அன்பின் தெய்வமே! இமயத்துக்கும் எட்டாத எங்கள் பாசத்தின் திருவிளக்கே, எங்கள் அகத்தின் மிளிர்கின்ற மெய்ச்சுடரே எங்களை எல்லாம் காரிருளில் தவிக்கவிட்டு இமைப்பொழுதில் இமைகளை மூடிக் கொண்டீர்களே எங்கள் அன்னையே! பின்னிப் படர்ந்த எங்கள் பாசக் கொடிகளை எல்லாம் ஒரு நொடியில் வெட்டி வீழ்த்திவிட்டு எங்கே சென்றாய் அம்மா இன்று நாம் வான்முகில் இல்லா வாடிடும் பயிர் போல் வாடவிட்டு இறைவன் திருமுடிகாணச் சென்று விட்டீர்களே உங்கள் கமலப் பாதங்கள் இறையடி சேர்ந்தாலும் உங்கள் பாசம் எம் நெஞ்சை விட்டு அகலாது அம்மா, அம்மா. உடன் பிறப்பு இல்லா உடல் பாழ்போகுதம்மா ஈரேழு பிறவி எடுத்தாலு உங்கள் திருமுகத்தின் ஒளிவிளக்கு எட்டாது உங்கள் தெய்வீக சக்தி என்றும் எங்கள் கமல் சடைக்கண் வைதாயே அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

உங்கள்பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
C 4556 சோதரிகள்.

## மணிவாக்கு

"நச்சை வாயிலே கொணர்ந்து
நண்பர் ஊட்டுபோதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப
தில்லையே"

— பாரதியார்.

# நமது நோக்கு

## ஒன்றுபட்ட சமுதாயம்

சென்னைக்கு வந்து தமிழ்ப்பேரறிஞர் மு வரத ராஜனுடன் சில ஆண்டு களாகத் தமிழ் ஆராய்ச்சி நடத்திய ரஷ்ய அறிஞர் கலாநிதி வித்தாலி போர் னிக்கா மகாகவி பாரதி யாரைப் பற்றி ரஷ்ய மொழியில் இவ்வருடம் வெளியிட்ட நூல் மிகப் பெரும் வரவேற்பைப் பெற் றிருக்கிறது.

மகாத்மாகாந்தி, நேரு போன்ற பெருந்தலைவர் களுக்கில்லாத பெருமதிப்பு மகாகவி பாரதியாருக்கு சோவியத்ரஷ்யா ஏற்கனவே அளித்திருப்பதை மாஸ்கோ பல்கலைக்கழகம் வெளிப் படுத்துகிறது. காரணம் கண்டு பிடிப்பது கடின மல்ல

மக்கள் தொகுதி எக் குறையாலே பெருந்துன்பம் அடைகிறதோ அக்குறை தீர்க்கும் ஆற்றல் வாய்ந்த வனை 'சிக்கென ஈன்று சீர்பெறும்' என்று உறுதி கூறிய பாரதியார் 'ஸார்' ஸாரின் கொடுமை தாங்கா ரஷ்யா ஏருற லெனினை ஈன்றே' தீரும் என்று பாடினார்.

ரஷ்யாவின் அக்டோபர் புரட்சியை வெகுவாக மெச் சியவர் சுப்பிரமணியபாரதி யார். தாழ்ந்த நிலையில் இருந்த தமிழ்நாட்டைத் தானே தட்டி எழுப்பிய கவிதைக்குயில் இவர் புரட் சிப் போக்கை விரும்பும் நாடுகள் அனைத்திலும் மகாகவியின் குரல் இன் றும் ஒலிக்கின்றது.

தமிழால், பாரதி தகுதி பெற்றதும், தமிழ் பாரதி யால் தகுதிபெற்றதும், எங்கள் நாட்டு இளைஞர் நன்ருக அறிந்திருப்பார் களோ வென்பது சந்தேகம்.

ஆங்கிலப்படிப்பில் நாம், குறிப்பாக யாழ்ப்பாணத் தவர்கள் பலன் கண்டோம். அதற்குவசதி யற்ருேர் அந் நியர் ஆட்சியில் — ஏன் இன்றும் கூட — படித்து வந்த தமிழை புறக்கணித் தோம், இகழ்ந்தோ மென் றும் சொல்லலாம்.

இன்று ஆங்கிலப்படிப்பின் மகிமை குன்றிவிட வில்லை. அறிவியலுக்கு வழிகாட்டும் பெரும்பாதை எனபதும்புல ஞகிறது. ஆனுல் தமிழன் என்ருெரு இனம் உண்டு; அதர்கொரு தனிச்சிறப்பு உண்டு என்பது இலங்கைத் தமிழருக்கு இன்று உண் டான அபாயத்தால் அழி வால் நன்கு புலப்படுகின் றது.

யூதர்களைப்போல் இலங் கைத் தமிழர் பாதுகாப்புத் தேடி எங்கெங்கெலாம் ஓடித்தப்புகின்றனர். கனவி லும் நினைக்கமுடியாத அதி நுட்ப தொழில்களில் ஈடுபடு கின்றனர். 'அச்சமில்லை அச்சமில்லை' என்று பாடிய பாரதியார் இன்றிருந்தால் அஞ்சி, பிறந்த பொன் ஞடடை விட்டு வெளியே றும் கோழைச் செயலை எவ் வாறு சகிப்பார்?

இன்றையநிலைமையைச் சரியாகப் புரியாத அறிவி லிகளே இவ்வித ஏளனத்தில் இன்பம்காண்பவர்கள்.

"கோட்டை நாறிகாலி இன்றுண்டு நாளை கொண்டு போய் விடுவன் தமிழ்க் காளை" என்றும் "அடக்கு முறை செய்திடல் முடியும், கொள்கை அழிக்குமுறை எவ்வாறுமுடியும்" 'ஒடுக்கு சிறைகாட்டுதல் முடியும். உணர் வொடுக்குதல் எவ் வாறுமுடியும்' என்றும் 'இத் தமிழர் எழுச்சியை மாற் றவாமுடியும்' என்னும் தீர்க்கதரிசனத்தை இன்று இல ங்கைத் தமிழ் இளைஞர் மெய்ப்பித்திருக்கின்றனர்.

'ஷெல்' என்ருல் ஷெல் என்ற பழைய ஏற்பாடு திறம்படச் செயற்படுகி றது. கையில் 'ஷெல்' துண் டுகளை ஏந்திய டாக்டர்கள் ஊழியர்கள் ஆயிரம்பேர் யாழ் செயலகம் வரை இன்று நடத்தி முடித்த பிர மாண்டமான ஊர்வலம் ஒருபுதிய ஏற்பாடு,

யாழ் கோட்டையிலிரு ந்து இலங்கை ராணுவம் நடத்தும் தாக்குதலை பகுத் தறிவாளர்கள் என்ற அடிப் படையில் ஒருமித்து ஆட் சேபிக்கின்றனர்; யாழ். அர சாங்க அதிபருக்கு ஒரு மக ஜரும் சமர்ப்பித்திருக்கின் றனரென்கிறது செய்தி

இன்று தீவிரப் போர் நடக்கும் யாழ் நகரில் ஊர் வலமும் மகஜரும் என்ற கிண்டலும் இருக்கத்தான் செய்யும். மகாகவியின் தீவிரவாதத்துக்கு இது முரண்பட்டதல்லவா என்ற வினவும் எழலாம். போர் போராக நடைபெற பொதுமக்கள் காப்பாற்றப் படவேண்டுமென்பதையார் ஆட்சேபிப்பார்? எனவே பொதுமக்களின் பாதுகாப் பிற்குகோட்டை இராணுவ முகாம்அகற்றப்படவேண்டு மென்ற கோரிக்கைமிக அவ சரமானது.

பயங்கரவாத இளைஞரை முறியடிக்க வந்த இராணு வம் என்ன செய்கிறது? யாழ். இளைஞரின் பதில் தாக்குதலுக்குப் பலியாகி றது பொது மக்களைக் கொன்று குவிக்கிறது.

யாழ் கோட்டையைச் சுற்றியிருக்கும் ஆஸ்பத்திரி போன்ற உயிர் நிலையங்க ளைத் தவிர்த்துத் தாக்குதல் நடத்தப் பயிற்சி பெற்றிருக் கிறதா?

பாகிஸ்தானில் பயிற்சி பெற்றிருந்தால் இலங்கை ராணுவம். கராச்சியில் விமானக் கடத்தல்காரரை முறியடிக்க பாகிஸ்தான் கொமாண்டோக்கள் நடத் திய சாதனையையே பின்பற் றும்.

தமிழ் மக்களின் உரிமைக் குப்போரிடும் இளைஞர்கள் மானம்பெரிது உயிர் பெரி தில்லை என்பதை உலகறி யச் செய்துவிட்டார்கள். ஒன்றுபட்ட சமுதாயம் உருவாகிறது.

நாம் குறிப்பிட்ட மகஜ ரில் சேர்க்கப்படவேண்டிய இரண்டு விடயங்கள்: உலகி லேயே மிக அழகானடச்சுக் கோட்டையை மட்டுமல்ல அங்குள்ள ராணுவத்தின ரையும் பாதுகாக்க ராணுவ முகாம் அகற்றப்படுவதே ஒரேயொருவழி.

# உலக மகாகவி சுப்பிரமணிய பாரதி நினைவுதினம் இன்று

இந்தியாவின் தேசியக் கவி என்று காந்திஜியால் போற்றப்பட்டுச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனமுழக்கமிட்ட ஒரு கவி ஞன் பாரதியின் நினைவு நாள் இன்று! தமிழர்களின் உரி மைப் போராட்டம் நடக்கும் இந்த நாளில் எம்மத்தியிலே மகாகவிகள் இல்லாத குறை யைப் பாரதியே நீக்கிக் கொண்டிருக்கிருர்.

காந்திஜியை ஒருமுறை பார தியார் சந்தித்தார். அப்போது 'ஷெல்லி' என்ற கவிஞனுக்கு மன்றம் அமைத்து அவரது கவிதைகளிலே பாரதி மூழ்கி யிருந்த காலம்! காந்திஜி யைச சந்தித்த பாரதி திரு வல்லிகேணியிலே நடக்கும் இலக்கிய மன்றுக்கு வெள் ளிக்கிழமை வருமாறு அழைத் தார். "காரியதரிசி அவர்களே! பாரதியின் கோரிக்கைநிறை வேற்ற நேரம்கிடைக்குமா?" எனக் காந்திஜி வினவினர். நாளை சரிப்பட்டு வராது எனக் காரியதரிசி அறிவிக்க உங்க ளுக்காக எனது திகதியை ஒத் திப்போடமுடியாது என அறி வித்த புலவன்- சுப்பிரமணிய பாரதியே!

காந்திஜிக்குக் குரு டால்ஸ் டாய். அரிஸ்ரோட்டிலுக்குக் குரு சோக்கிரட்டீஸ்! மகாகவி பாரதியின் குரு யாழ்ப்பாணச் சாமி என்று அழைக்கப்படும் மாமனிதன்! மகாகவி பாரதி யைப் பற்றிப் பேசுவதற்கு இந்த மண்ணிற்கு அதிக அரு கதையுண்டு!

எங்கெல்லாம் சுதந்திரம் இல்லையோ அங்கெல்லாம் நான் இருப்பேன் என்றுபாடி ஞன் பைரன் என்ற புலவன் பாடியதுமாத்திரமன்றி வலது குறைந்த அந்தப் புலவன் போராளியாகக் கிரேக்க சுதந் திரத்திற்குப் போராடியதை உலகம் மறந்துபோகமுடி யாது. பைரன், ஷெல்லி போன்ற கவிஞர்களின் அடிச் சுவட்டிலே வநதவனே பாரதி! அவனைமிக உயர்ந்த பயங்கர வாதி (Dangerous Terrorist) எனப் பிரிட்டிஷ் ஆட்சி கட லூர்ச் சிறையிலே தள்ளியது. அங்கே அவன் பயந்துவிட வில்லை. 'ஜயமுண்டு,பயமில்லை மனமே

—இந்த ஜன்மத்திலே விடுதலையுண்டு... என்று அவன் பாடினுன்.

சவூர் என்பவன் இத்தாலி யின் சுதந்திரத்திற்காகப் போராடிய ஓர் இராஜதந்திரி. அவனைப்பற்றி டெயிலர் என்ற ஆசிரியர் ' ஓ... அவரா இத்தா லியில் போராட்டம் நடந்த போது அவர் பிரெஞ்சுக் கவி தைகளிலே மூழ்கியிருந்தார்" எனக் குற்றம் சாட்டுகின்ருர். ஆனுல் பிரெஞ்சு, ஆங்கிலக் கவிதைகளிலே திளைத்திருந்த மகாகவி பாரதி இந்தியா வுக்கு மாத்திரமன்றி உலகத் திலெங்கெங்கு ஒடுக்கப்பட்டர் கள் இருந்தார்களோ அவர் கட்காக எல்லாம் பாடினுர். பாடியதை மற்றவர்கள்பாடச் செய்தார்

சின்னஞ்சிறிய பெல்ஜிய நாட்டுக்குள் ஜேர்மன் படை கள் நுழைந்தன அப்போது கூடவே விடுதலைக்கவிஞன் பாரதியின் பார்வையும்அங்கே விழுந்தது சின்னஞ்சிறு பெல் ஜியமே தர்மத்தின் வெற்றி யனே சூது சவ்வும். தருமம் மறுபடி வெல்லும் என நினை த்து அந்த நாட்டுக்கு வாழ்த் துக் கூறினுர் கவிதையிலே!

ரஷ்யாவிலே ஜார் ஆட்சி நடந்துகொண்டிருந்தது. இம் மென்ருல் சிறைவாசம். அம் மென்ருல் வனவாசம். ரஷ்ய மக்கள அடிமைகளாய் வாழ் ந்த அந்தக் காலத்திலே லெனின் தலைமையில் பெரும் புரட்சி வெடித்தது அந்தப் புரட்சியை கீழ்த்திசையிலே



வடித்துக்காட்டியவன் பார தியே!

"மகா காளி பராசக்தி ருஷ்ய நாட்டினில் கடைக் கண் வைத்தாள் —அங்கே
ஆகா என்றெழுந் தது பார் யுகப்புரட்சி
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்"

பாரதியின் பார்வை சர்வ தேசியம் மிக்கது. இந்தியா வின் இடதுசாரித் தலைவர்க ளில் லெனினுக்குப் பிடித்தவர் திலகர். அதுபோன்றே இந்தி யாவின் இடதுசாரித் தலைவர் களில் பாரதிக்குப் பிடித்தவ ரும் திலகரே.

இந்த நாடு சமயச்சண்டைக்கு அப்பால் இருக்கவேண்டுமெ னக் கனவு கண்டார் அவர். பாரதியும் இந்த அதியுயர்ந்த நிலைக்குக் களைத்தவர் அல்ல! தாயின் மணிக்கொடி என்ற பாடலிலே இந்திரனின் வச்சி ராயுதத்தையும் மூஸ்லிம் மக் களின் இளம்பிறைச் சின்னத் தையும் உருவகப்படுத்திய ஒற் றுமைக் கவிஞன் அவர்!

நான்முதலிலேயே சீனன். பின்பு நான் ஓர் உலகப் பிரஜை எனமுழங்கியவர் சன் யாட் சென். பாரதியும் நான் ஒரு தமிழன் என்று இனங் காட்டினுன செந்தமிழ் நாடெ ன்னும்போதினிலே இன்பத் தேன் வந்துபாயுது காதினிலே எனப்பாடி இந்தியாவில் என் நாடு தமிழ் நாடெ னக்காட்டிய பெருமை அவ ருக்கே ஆனுல் சமயம் வந்த போது "முப்பதுகோடி ஜனங் களின் சங்கம் முழுமைக்கும் பொதுவுடமை" எனஇந்திய நாட்டின் எதிர்காலத்தை இனங்காட்டினுன். அதற்கப் பால் தனி ஒருவனுக்கு உண வில்லைஎன்ருல் ஜெகத்தினையே அழித்திடுவோம்" எனப் பாடி ஞன்!

"வீரசுதந்திரம்வேண்டி நின்

### திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

பெரும்பான்மைச் சிங்கள மக்களின் இறைமையை மதி த்து "சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம்" எனப் பாரதி பாடினுர்.ஆனுல் தமிழ் மக்களின் இறைமையை மதித் துப்பாடிய சிங்களக் கவி யாரு மில்லை.

நிலங்களை ஐந்தாக வகுத்து நிலநூலில் தனக்கிருந்த வல்ல மையை எடுத்துக் காட்டிய வன் தமிழன். பாரதியாரோ தொழிலாளர்களை நாலு பிரி வாகப் பிரித்தார். முதலா வது பிரிவிலே மூளை உழைப்பா ளர்கட்கு இடம்கொடுததான், இரண்டாவதாக நிர்வாகஞ் செய்வோரைப் Adminístators பிரித்துரைத்தான் மூன்ருவது நிலையில் வர்த்தகர்களை வைத் தான் நாலாவதாக உழைப் பாளர்களை நிற்பாட்டினுன் ஆனுல் எத் தொழிலாளி யும்எவருக்கும் அடிமையல்ல என்றும் எழுதிவைத்தான். மொத்தத்தில் அதிகாரப் பர வலாக்கலைச் சுட்டிக்காட்டி உயர்ந்த சோசலிசத்தை விதைத்தவன் பாரதியே!

ஜவஹர்லால் நேரு ஒரு பிரா மணராக இருந்தும் நெற்றி யிலே விபூதி அணிவது இல்லை.

றேம் பின்பு வேறொன்று கொள்வாரோ" எனப் பாடிய பாரதி பாஞ்சாலி சபதம் மூலம் விடுதலையை உருவகப்படுத்தி யுள்ளார். பாஞ்சாலியின் சப தம் நிகழ்கால இந்தியா! அந் தச் சபதத்தின் இறுதிவெற்றி இந்தியவிடுதலை.

வந்தே மாதரம் என்போம்; இந்த மாநிலத்தாயை வணங்கு தல் செய்வோம்" எனப் பாடிய பாரதியின் பாடல்கள் ஒவ்வொருநாட்டின் தேசிய கீதத்திலும் அந்தந்த நாட் டின் கலாச்சாரத்துடன் இன்று சேர்ந்து ஒலிக்கின்றது பூமியில் இருந்து வீசும் காற் றையும் குதிரையாக்கி ஏறித் திரியும் சக்தி மனிதனுக்கு வேண்டும் எனப்பாடிய பாரதி யின் கருத்து எம்முள் புகட் டும் எங்கும் வெற்றி! எதி லும் வெற்றி!! "வந்தே மாத ரம் என்போம் இந்த மாநிலத் தாயை வணங்குதல் செய் வோம்"

## சுப்பிரமணிய பாரதியின் நினைவு தினம் இன்றடா!

சுப்பிரமணிய பாரதியின் நினைவுதினம் இன்றடா!
சுதந்திரத்துக் காகப்பாடு பட்டவனும் அவனடா!
தப்பிதத்தைத் தாரணியில் செப்பியவன் அவனடா!
தமிழகத்தைத் தட்டியன்று எழுப்பியவன் அவனடா!
சொப்பனத்தி லுங்கவிகள் சொன்னவனும் அவனடா!
தோகையரின் அடிமைவிலங் கறுத்தவனும் அவனடா!
அப்பொழுதே வீறுபெற்றுப் பாடியவன் அவனடா!
ஆங்கிலேய ருக்குச்சவால விட்டவனும் அவனடா!

★

வறுமையெனும் பெரும்பிணியைக் கண்டவனும் அவனடா!
வறுமையிலும் பொறுமைதனைக் கொண்டவனும் அவனடா
சிறுமையிலும் பெருமையினைச் செப்பியவன் அவனடா!
சிறியவர்க்கும் பெரியவர்க்கும் பாடியவன் அவனடா!
செறுநர்களைப் பாடிப்பாடிச் செயித்தவனும் அவனடா!
செகத்துமக்கள் சாதிதனைச் சாய்த்தவனும் அவனடா!
விறுவிறுப்பாய் நல்வினைவைக் கண்டவனும் அவனடா!
விடுதலைக்கு அன்றுபாடு பட்டவனும் அவனடா!

- கவியரசு வெண்பாமணி முருககுரியன்

# அன்னை துர்க்கை தாள் தொழுவோம்

இராகம்: காப்பி தாளம்: ஆதி (சமம், திஸ்ர நடை)

எடுத்தல்

தெல்லிப்பழை நாயகியே தேவி துர்க்கா ஈஸ்வரியே
தேன் தமிழில் கொற்றவையே தேடியுனைப் பாடுகின்றேன்
(தெல்லிப்பழை நாயகியே)

தொடுத்தல்

நாடிவரும் அன்பர்களின் நலன்களைக்காப்பாயம்மா
வேடிக்கையாய் மாயைதன்னை விளையாட்டாய் ஆட்டிடுவாய்
(தெல்லிப்பழை நாயகியே)

ஒடுக்கல் I

கன்னியரை வாழவைப்பாய் காளையரை காத்தருவாள்
எண்ணியரைத் திண்ணியராய் இசையாகப் புகழ் சேர்ப்பாய்
புண்ணியரைப் போற்றிடுவாய் பூதலத்தின் புவனேஸ்வரி
பண்ணிசையில் பாடுகின்றேன் பார்த்திடு உன் கடைக் கண்ணால்
(தெல்லிப்பழை நாயகியே)

ஒடுக்கல் II

அழகிற்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியே ஐயை
தமிழுக்கும் மறவருக்கும் தெளிவான கொற்றவை நீ
குழலுக்கும் யாழுக்கும் குழைவான முழவுக்கும்
அமிழ்தாக நின்றவளே ஜெயதேவி துர்க்கையம்மா!
(தெல்லிப்பழை நாயகியே)

சங்கீதபூஷணம்
எஸ். வி. பரமலிங்கம்

## பாரதி நினைவாக கவிதை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வியாழன்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நினைவுதினத்தை முன்னிட்டு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கவிதைகள் நிகழ்வு இடம்பெறுறவுள்ளன.

இன்று நடைபெறவுள்ள இக் கவிதை நிகழ்வுக்கு திரு. சொக்கன் தலைமை வகிப்பார், அரியாலையூர் கவிஞர் வே. ஐயாத்துரை, புதுவை இரத்தினதுரை, சோ. பத்மநாதன், மூ. பொன்னம்பலம் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றுவார்கள்.

வித்தியாலய அதிபர் திரு. மூ. இராமலிங்கம் 'பாரதியாரின் கவிதைச் சிறப்பு' என்ற பொருள் பற்றி உரை நிகழ்த்துவார். (ச)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியா.

யாழ் வர்த்தகர் சங்கம், வடபிராந்திய லொறி போக்குவரத்து சங்கம், யாழ் முஸ்லிம் லொறி போக்குவரத்து ஒன்றியம் ஆகியவற்றின் இணைப்புகுழுவுக்கும் விடுதலை அமைப்புகளுக்கும் இடையே நேற்று முன்தின கலந்துரையாடல் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் காலவரையறையற்ற கடையடைப்பு லொறிப்போக்குவரத்து இடைநிறுத்தம், ஆகியனவற்றின் மாற்றுத்தீர்வு ஒன்றிற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டன. மாற்றுத்தீர்வு ஒன்றின் மூலம் சுமூகமான முடிவைஎடுப்பதற்காக தற்காலிகமாக ஹர்த்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் இது சம்பந்தமான விபரங்கள் பின்பு அறிவிக்கப்படும் என்றும் ஒன்றிய செயலாளர் அறிவித்துள்ளார். (வா)

லிடோ
10-30, 2-30, 6-30
சிவாஜிகணேசன்
மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(புதிய பிரதி)

வெலிங்டன்
10-30 2-30, 6-30
தியாகராஜன்
சில்க் சுமிதா
ஜெய்சங்கர்—பானுசந்தர்
நடித்த
நீங்கள் கேட்டவை
(கலர்) புதிய பிரதி

## மயிலங்கூடல் "வேளாங்கன்னி" திருவிழா

யாழ்ப்பாணம், வியா

இளவாலை மயிலங்கூடல் அன்னைவேளாங்கன்னி மாதாவின் வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

மரியன்னையின் பிறப்பின் இரண்டாம் ஆண்டு நிறைவினை நினைவுகூரும் முகமாக மேற்படிவிழா இம்முறை மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படவுள்ளது.

இன்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இவ்விழா தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறவுள்ளது

இவ்விழாவின் இறுதி நாளான ஞாயிற்றுக் கிழமை காலை திவ்விய பாடற்பூசையும் அதைத்தொடர்ந்து திருச்சுரூபபவனியும் நடைபெறும்.

அன்னையின் விழாவை முன்னிட்டு பக்தர்களின் வசதிக்காக, விசேஷ பஸ் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக இளவாலை பங்குக்குரவர் தெரிவித்தார். (வி)

## பெண்ணைத் தாக்கியதால் இந்தத் தண்டனை

[இராமநாதபுரம் நிருபர்]

பரந்தன் சந்தியில் நேற்று முன்தினம் இரு இளைஞர்கள் உயிருடன்மின்கம்பத்தில்கட்டப்பட்டுகாட்சிக்கு விடப்பட்டிருந்தனர்

பெண் ஒருவரைத்தாக்கியது தொடர்பாகவே இந்த இரு இளைஞர்களுக்கும் இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இளைஞர் குழுவொன்றினால் வழங்கப்பட்டிருந்த இந்தக் காட்சித்தண்டனையை பொது மக்கள் பலர் பார்வையிட்டனர். ஓ]

## கால் இடறி வீழ்ந்து காயம்

யாழ்ப்பணம், வியா.

'ஷெல்' ஏவப்பட்டுள்ளது என்ற அபாய அறிவிப்பு ஒலி கேட்டுத் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஓடிய நபர் கால்இடறி வீழ்ந்து காயத்துக்குள்ளானார். இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இச்சம்பவம் யாழ் நகரவீதியில் நடைபெற்றது. [ச]

## சுண்டிக்குளி பரிசளிப்பு விழா

(நெடுந்தீவு)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9-30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்கின்றார்.

## வட இலங்கை. .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிலிப்ஸ், டாக்டர் ஜே ரி சேவியர் ஆகியோருக்கு எழுதிய கடிதத்தில் அங்கீகாரத்திற்கான விண்ணப்பப் படிவங்கள், வட இலங்கை மருத்துவர்கள் கல்லூரியை அங்கீகரிக்கும் பாராளுமன்றச் சட்டம் நிறைவேறிய பின்னரே அனுப்பி வைக்கப்படும் என்று எழுதியிருந்தார்.

மானிய ஆணைக் குழுவின் செயலர் தமது கடிதத்தின் நான்காம் பந்தியில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் எம். பி. பி. எஸ். பட்டத்திற்கு மாணவர்களைச் சமர்ப்பிக்கும்பொழுது பல்கலைக் கழகங்கள் சட்டம் இல. 16 (1978) பகுதி 25 ற்கு அமைய அனுமதி பெறப்படவேண்டும் என்று ஆலோசனை வழங்கியுள்ளார். இவையனைத்தும் அங்கீகரிக்கும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறிய பின்னர் செய்து முடிக்கப்படும்.

வட இலங்கை மருத்துவர்கள் கல்லூரியை அங்கீகரிக்கும் சட்டமூலம் யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் அவர்களால் 20 - 6 - 86 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, 4 - 6 - 86 அன்று அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

## மாங்குளத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியுள்ளார்கள்.

இது இவ்வாறிருக்க கடந்த ஞாயிறு இவ்வாலயத்தில் 'சதுர்த்திவிழா' இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயம் உள்ளே புகுந்த ஆயுதப்படையினர் அங்கிருந்த பொதுமக்களை பலமாகத்தாக்கினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## யாழ். மாவட்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இது பற்றி யாழ் சமூக சேவைப்பகுதி உத்தியோகத்தர் திரு. எஸ். இராமநாதன் தெரிவிக்கையில்

யாழ் மாவட்டத்தில் அண்மைக்காலங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் ஷெல் தாக்குதல்களினாலும் ஆகாயத் தாக்குதல்களினாலும் மற்றும் பலதரப்பட்ட விபத்துக்களினாலும் கால்களை இழந்த அநேகம் பேர் இந்த ஜெய்ப்பூர் கால்களைப் பெறுவதற்காக யாழ் சமூக சேவைப் பகுதிக்கு விண்ணப்பித்துள்ளனர். இவற்றில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் உதவி வைத்தியராக இருந்து ஒரு காலை இழந்த திரு வேலாயுதம் என்பவருக்கும் ரயில் விபத்தில் இரு கால்களையும் இழந்த திரு பி உதயணன் என்பவருக்கும் ஜெயப்பூர் பாதம் பொருத்தப்பட்டுள்ளது. மற்றுமொரு மோட்டார் விபத்தில் சிக்கி ஒருகாலைஇழந்த இளம் பெண்ணான ரதிக்கா சோமசுந்தரம் என்பவர் இதனைத் பொருத்துவதற்காக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இக் கால்களைப் பெறுவதற்கு பண வசதி இல்லாதவர்களுக்கு உதவ சில பொது ஸ்தாபனங்களும், தொண்டர் ஸ்தாபனங்களும் முன் வந்துள்ளன என்றும் திரு. இராமநாதன் தெரிவித்துள்ளார்.

# படுவான்கரையில் இராணுவ முற்றுகை முயற்சி

(நமது நிருபர்)

மட்டக்களப்பு படுவான் கரைப்பகுதியை நேற்றுக் காலை முற்றுகையிடச்சென்ற இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் எதிர்கொண்டு தாக்குதல் நடத்தினர்,

இதனைத் தொடர்ந்து இரு தரப்பினரிடையேயும் பலத்த நேரடி மோதல் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

படுவான்கரைப் பகுதியை முற்றுகையிடுவதற்காக 300 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் இரு ஹெலிகொப்டர்களிலும் விசைப் படகுகளிலும் வலையிறவுப் பாலத்தில் இறக்கப்பட்டனர்,

வலையிறவுப் பாலத்தில் வந்திறங்கிய இராணுவத்தினர் முன்னேக்கி வருகையில் விடுதலைப் புலிகள் 'கனன் சார்ஜ்' இனை வெடிக்கச் செய்ததன் மூலம் நேரடி மோதல் மூண்டதாகவும் தமிழீழவிடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## தோட்டக் காவலாளியின் காம்பராவுக்குத் தீ

ஹற்றன், புதன்

டெவன் தோட்டத்திலுள்ள சிங்களக் காவலாளியின் காம்ராவுக்கு தீவைக்கப்பட்டதால் அது முற்றாக எரிந்துவிட்டது

நேற்றிரவுஇச்சம்பவம்இடம் பெற்றது.

இப் பகுதியிலுள்ள பாடசாலை ஆசிரியையின் வீடுசேதமாக்கப்பட்டதுடன் பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாகவே மேற்படி காவலாளியின் காம்பரா எரிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. (மா)

## திருமலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது.

சுட்டுக்கொல்லப்பட்ட மூவரின் சடலங்களும் திருமலை ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் இராணுவத்தினரால் எடுத்துச்செல்லப்பட்டு எரிக்கப்பட்டன. (மா)

## நிஜமாகப்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னுரிமை அளிப்போம்

ஆயினும் பொருளாதார ரீதியாக எமது நாட்டில் குடிகுடிபெயர முனைவோருக்கெதிராக நாம் கடும் நடடிக்கைகளை மேற்கொள்வோம் இது தொடர்பாக போதியளவு ஆதாரமின்றி போலி அகதிகளைக் கொண்டுவரும் விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து சேவைகளுக்கெதிராகவும் நடவடிக்கைகளை எடுப்போம்'' என்றார்.

அத்துடன் எதிர்காலத்தில் அகதிகள் நெருக்கடியை கூடியளவு சமாளிக்கும் விதத்தில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படும் எனவும் அவர்தெரிவித்தார்.

## கலாசார...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

முதல் நாள் நிகழ்ச்சிகள் நாளை மாலை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையுடன் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும்.

எம். பஞ்சாபிகேசனின் நாதஸ்வர இசையுடன் ஆரம்பமாகும் நிகழ்ச்சியை தொடர்ந்து திரு. என். வி எம். நவரத்தினத்தின் பண்ணிசையும் அதனை தொடர்ந்து திரு எஸ். கலாபதிப்பிள்ளையின் இசைக் கச்சேரியும் இடம் பெறும். [சி]

## முந்திரி, தென்னை தோட்டங்கள் தீக்கிரை

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு கல்முனை வீதி புநக்குகுயிருப்பு ஆகிய இடங்களில் வீதிகளின் ஓரமாகவுள்ள பற்றைக்காடுகளுக்கு தீ வைக்கப்பட்டதால் முந்திரிகைத் தோட்டங்கள், தென்னந்தோட்டங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆயுதப்படையினர் தமது ரோந்து நடவடிக்கையின் போது பாதுகாப்புக்கருதி இத் தீவைப்பு நடவடிக்கையிலீ பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா]

## பீரங்கிப்படகில் இருந்து வந்தோர் கைதாகி விடுதலை

யாழ்ப்பாணம். வியாழன்.

காங்கேசன்துறை துறைமுகத்தில் கடற்படையினரின் பீரங்கிப்படகிலிருந்து இறங்கி வந்த இருவரை போராளிகள் பிடித்துள்ளனர்.

இவ்விருவரையும் போராளிகள் விசாரணைசெய்த பின்னர் விடுவித்துள்ளனர்.

கடற்படைக்குச் சொந்தமான பீரங்கிப படகுகளின் இயந்திரங்கள் திருத்தம் செய்யும்இருவரும் தமிழர்கள் என்றும் இவர்கள் தெல்லிப்பழையிலுள்ள தங்கள் வீடுகளுக்கு நேற்றுமாலை திரும்பிக்கொண்டிருக்கையிலேயே போராளிகளால் கைது செய்ப்பட்டு விசாரிக்கப் பட்டதாகவும் தெரியவருகிறது. [மா]

## யாழ் இளைஞர் தடுத்து வைப்பு

வவனியா, புதன்

வெளிநாடு செல்வதற்காக கொழும்பு பஸ்ஸில் வந்த யாழ் இளைஞர் ஒருவர் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப் பட்டுள்ளாரென அறியப்படுகின்றது.

மிது வீடியோ மூவீசாரின்
இன்றைய புதிய வெளியீடு
சந்திரமோகன், விஜயசாந்தி
நடித்த
பூ ஒன்று புயலானது
(தரமான பிரதி)
மிது வீடியோ மூவீஸ்
பிரதான வீதி,
சித்தன்கேணி.
(A 1262)

## நெஞ்சில் நிலைத்தவர்



இந்த உலகத்துக்குள்ளபெருமைகள் எல்லாவற்றிலும்பெரியது ஒன்று உண்டு; அது பெயரா இயற்கை. இதை வள்ளுவர் அருமையாகக் கூறினார்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு"என்றார். இருப்பினும் ஒருசிலரின் பிரிவு மறக்கமுடியாததாகவும் தாங்கமுடியாததாகவும் அமைந்துவிடுகிறதே.

தன்கடமை உணர்ந்து காரியம் செய்யும் பெருமனம் படைத்தவர்கள் வந்தகடமை முடியுமுன்னம் அவனால் அழைக்கப்பட்டுவிடுகிறார்கள். இது என்ன நீதியோஎன்று அங்கலாய்க்கிறது உள்ளம். இந்த வரிசையில் அன்பன் நல்லதம்பி இராசலிங்கம் அண்மையில் இடம்பெற்றார்.

1952ம் ஆண்டு யாழ் இந்துக்கல்லூரிக்கு வருகைதந்து விடுதியில் இடமின்மையால் உரிமை பற்றி என்குடிசையில் அவர்அண்ணருடன் படுத்துறங்கியது விளையாட்டு மைதானத்தில் பந்துகள் உருட்டிப் பாடசாலைக்கு விருதுகள் பல பெற்றுத் தந்தாலும் அவைகளால் நான்பெருமை கொண்டதும் அவர்மணக்கோலம் கண்டு மகிழச் சென்றதும் பச்சையான நினைவுகளாக மனத்திரையில் ஓடக் கதாநாயகன் மறைந்துவிட்டான். என்ன கொடுமை! இதற்கும் தெய்வ நீதி என்று நூலோர்கூறுவர்.

இராசலிங்கம்! நின்னை மறக்க ஆயிரக் கணக்கான மாணவர்களைக் கண்ட என்னாலேயே முடியவில்லை. நின் மனையும் குழந்தைகளுக்கும் தேறுதல் தரத் தெய்வமும் உண்டு கொல். நீவிட்டுச்சென்ற பாரத்தை சுமக்க நின்மனைக்கு பலமும் திடமும் சுவர்க்கத்திலிருக்கதருவாய் என்றநம்பிக்கை அவர்களை வாழவைக்கும். நின் சுற்றமுடன் சாந்திக்குவேண்டி வணங்கி அமைகிறேன்.

க. சிவராமலிங்கம்

## கடற்றொழிலாளரின் அசட்டையால் ஏற்படும் பாதிப்புகளுக்கு அவர்களே பொறுப்பு

மாவிட்டபுரம், புதன்

"கடற்றொழில் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ள போதும் உத்தியோகப்பற்றற்ற முறையில் கடலில் 2 மைல் தூரத்தில் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனை கடற்றொழிலாளர்கள் கடைப்பிடிக்கத் தவறினால் அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கு அவர்களே பொறுப்பாகும்"

இவ்வாறு மயிலிட்டி பிரஜைகள் குழுத் தலைவர் திரு. வி இரத்தினராசா கடற்றொழிலாளர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- அரசாங்கம் கடற்றொழிலை முற்றாக தடை செய்தபோதும் பிரஜைகள் குழுக்கள் மூலம் உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மனிதாபிமான அடிப்படையில் 2 மைல் தூரம் தொழில் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதை மீறி 2மைல்களுக்கப்பால் சென்றால் கடற்றொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளாக நேரிடும். அவ்வாறு பாதிக்கப்படுபவர்களுக்கு பிரஜைகள் குழுக்களும் உதவ முடியாத நிலை ஏற்படும். ஆகவே கடற்றொழிலாளர்களை 2 மைல்களுக்கு மட்டுமே தமது தொழிலை மேற்கொள்ளுமாறு கோருகிறோம். [உ]

## மாணவரின் ஆக்கத்திறன் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வியாழன்

கோப்பாய் கொத்தணிப் பாடசாலைகள் இணைந்து நடாத்தும் பாடசாலை மாணவரின் ஆக்கத்திறன் பொருட்காட்சி நாளை வெள்ளிக்கிழமையும் மறுதினம் சனிக்கிழமையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர் பூ. க. இராசரத்தினம் தலைமையில நடைபெறும் இப்பொருட்காட்சி வைபவத்தினை யாழ் கல்வித்திணைக்கள பிரதமகல்வி அதிகாரி கே. கந்தசாமி ஆரம்பித்துவைக்கின்றார். பொருட்காட்சியில் வைக்கப்பட்டு தெரிவு செய்யப்படும் சிறந்த பொருட்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இக்கண்காட்சியில் கோப்பாய் கொத்தணி பாடசாலையினைச்சேர்ந்த பாடசாலைகளை விட்டு விலகியோருக்கான தொழில் நுட்ப பயிற்சி மாணவர்களும் பங்கு பற்றுகின்றனர். [ச]


## மினிசினிமா ஒன்றியம்—
### யாழ். மாவட்டம்

மேற்படி சங்கத்தின் கூட்டம் எதிர்வரும்
ஞாயிற்றுக்கிழமை (14- 9- 86)
காலை 10.00 மணிக்கு ஸ்ரீதர் தியேட்டரில்

நடைபெற இருப்பதால் தயவுசெய்து யாழ். மாவட்ட சகல மினிசினிமா உரிமையாளர்களும் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

செயலாளர்.

(A 1259)

## திருமண அழைப்பு

காலம்: 14- 9- 1986 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: முற்பகல் (9-00—10-00) இடையில்
இடம்: நல்லூர் சிவன்கோவில்

மணமகன்: வடிவேல்
மணமகள்: செல்வராணி

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

அ. பொன்னுத்துரை குடும்பத்தினர், 93/5, கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

க. சுப்பிரமணியம் குடும்பத்தினர், 85/1 இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

(A 1260)

## வெளிநாடு பிரயாணம்

### டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி

செல்லவிருக்கும் பிரயாணிகளை ஒரு காலதாமதமுமின்றி அனுப்பிவைப்பதற்கு சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

### அமெரிக்கா கனடா

செல்லவிருக்கும் பிரயாணிகட்கு சிறிது கால தாமதம் ஏற்படினும் நிச்சயமாக அனுப்பிவைக்கப்படுவர்.

முழுவிபரங்களுக்கும் நேரில் தொடர்பு கொள்ளவும்.

வ. நல்லையா
அளவெட்டி.

[C 4557

## D.T. நைல்ஸ் ஞாபகார்த்த புலமைப்பரிசில்

இப்புலமைப் பரிசில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ நாகரீகத்தை பொதுக் கலைத் தேர்வுக்கு ஒரு பாடமாகக் கற்கும் புரட்டஸ்தாந்து மாணவர் ஒருவருக்கு வழங்கப்படும்.

முதலாண்டு கலைத் தேர்வுப் பரீட்சையின் பின்னர் இப்புலமைப் பரிசிலுக்குரிய மாணவர் தெரிவு செய்யப்படுவார்

புலமைப்பரிசில் மாதமொன்றுக்கு ரூபா 500/-

மேலதிக விபரங்கட்கு:

W. N. S. சாமுவேல்
இயக்குநர்,
கிறிஸ்தவ ஆய்வு நிலையம்,
இணுவில.

[C 4555]



## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## அமைப்பு வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1986ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24ம் திகதி புதன் கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை

| இல. | வேலை விபரம் | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கப்படக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்பட முடியாதது) | ஒப்பந்த காரர் பதிவுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | நாவாந்துறைச் சந்தை விஸ்தரிப்பும் புனரமைத்தலும் | 2000/- | 250/- | 500,000/- |
| 2. | துண்டி மயானத்திற்கு எல்லைச்சுவர் அமைத்தல் | 500/- | 150/- | 200,000/- |
| 3. | சீனிவாசகம் வீதியில் மதகு அமைத்தல் | 500/- | 150/- | 200,000/- |
| 4. | குருநகர் சந்தை புனரமைத்தல் | 250/- | 150/- | 100,000/- |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1986ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிவரை மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு கேள்விக்கும் எதிராகவுள்ள கேள்விப் பிணைப்பணம், கேள்விப் படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப் பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சீ. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 11-9-86.

[A 1254]



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு கிழமையும் கொழும்பிலிருந்து நேரடியாகப் பிரயாணம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

★ மத்திய கிழக்கு நாடுகள் ★

வருமான ஒழுங்குகளுடன் அழைத்துச் செல்லப்படும்.

அத்துடன்

பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங் உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

UNIVERSAL AGENCIES
யூனிவேர்சல் ஏஜென்ஸி
125 [455] ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில், பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

[A 1324]

# இலங்கையில் அதிகரித்துவரும் தமிழரின் மறைவுகள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கிறது

## அம்னெஸ்ரி இன்டர்நேஷனல்

**"இலங்கையில் பெரும்பாலானேர் 'காணமற்றபோயுள்ளனர்.' இவர்களில் அதிகமானேர் இளம் தமிழர்கள். இவர்கள் படையினரால் கொண்டுசெல்லப்பட்டோர்கள்."**

**இவ்வறிக்கையில் 'சர்வதேச மன்னிப்புச் சபை' (அம்னெஸ்ரி இன்டர்நேஷனல்) 'காணமற்போனவர்'பற்றி, அவர்கள் சட்டத்தால் ஏன் பாதுகாக்கப்படமுடியாமற் போயினர்; இதனை எவ்வாறு தடுக்கலாம் என்பதுபற்றி ஆராய்கிறது.**

''அதிகாரிகளினலோ அன்றி அவர்களின் ரகசிய ஆதரவுடனே ஒருவர் கைதுசெய்யப்பட்டு, ஆனல் அந்நபர் தங்கள் காவலில் இருப்பதை அதிகாரிகள் மறுக்கும்பட்சத்தில அந்நபர் 'காணமற்போயுள்ளார்' என்ற பதத்தை மன்னிப்புச் சபை (அம்னெஸ்ரி இன்டர் நேஷனல்) உபயோகித்து வருகிறது. இவ்வாறு 'காணமற்போனவர்கள்' சிலசமயம் கைதுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டோரில் பெரும்பாலானேர் பற்றிய தகவல் அவர்களின் உறவினர்களுக்கு இன்னமும் தெரியாமலுள்ளதாக எமக்கு அறிக்கைகள் வந்துள்ளன பல சந்தர்ப்பங்களில் ஒரு நபர் கைது செய்யப்படுவது குறித்து உறுதிப்படுத்த நேரில் பார்த்தவர்கள் இருந்தும் அந்நபரின் கைதுபற்றியோ அல்லது அவர் காவலில் வைக்கப்பட்டுள்ளது பற்றியோ அதிகாரிகள் தமக்குத் தெரியாது எனக் கூறியுள்ளனர்.

தொகுப்பு: **இ. செந்தில்**

சட்டவிரோத கைது, சித்திரவதை போன்றவற்றிற்கு ஆளாக்கப்பட்டிருக்கலாம். அவரது கைது உறுதிப்படுத்தப்படாமல்போகலாம. அல்லது அவர் ரகசிய காவலில் வைக்கப்பட்டிருக்கையில் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதையின் காரணமாக இறந்திருக்கலாம்.

### இலங்கையும் 'காணமற்போனேரும்'

இலங்கையின் வடக்குக்கிழக்கில் வாழும் தமிழ் மக்கள், சுயாட்சிகோரியும், அவர்களுக்கெனத் தனிநாடு கோரியும் போராட்டம் நடத்துவதனையடுத்து இங்கு 'காணமற்போனவர்கள்', மற்றும் சித்திரவதைபோன்றவை அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

தனிநாடு கோரிக்கையை முன்வைதநுத் தீவிரவாத தமிழ் இளைஞர் இயக்கங்கள் சில ஆயுதப் போராட்டம் நடத்துகின்றனர்

84 இறுதிப் பகுதியின் பின்னர் இவர்கள் ஆயுதமற்ற சிங்களமக்களைக் கொல்ல ஆரம்பித்தனர். இத்தகைய ஒவ்வொரு சம்பவத்தின் பின்னரும் பெருமளவு தமிழர் 'காணமற்போனர்கள்!'

இலங்கைப் பாதுகாப்பு படைகள் தமிழ் ஆயுதக்குழுக்கள் தம்மீது மேற்கொள்ளும் தாக்குதலையடுத்து நிராயுதபாணிகளான தமிழர்மீது பழிவாங்கும் கொலை நடவடிக்கைகள் மேற்கொண்டுவருவதுபற்றிய அறிக்கைகள் அதிகரித்தவண்ணமுள்ளன இதைவிடத் தமிழரைக் குறிப்பாக இளைஞரைப் பெருமளவில் கைதுசெய்தல்பற்றியும் தகவலுள்ளது அவர்கள் விசாரணையின் போது சித்திரவதைக்காளாக்கப்படுதலும் அதிகரித்துள்ளது பல சந்தர்ப்பங்களில் இச்சித்திரவதைகள் விசாரணை செய்யப்படுபவரின் மரணத்தில் முடிவுற்றுள்ளன

கைதுசெய்யப்படுவோரில் சிலர் கைதுசெய்யப்பட்டு ஒரு சில வாரங்களில் விடுதலைசெய்யப்படுகின்றனர்.

கைதுசெய்யப்படுபவர் எங்கு வைக்கப்படுகின்றார் என்பது பற்றி அவரின் உறவினருக்கு வழமையாக அறிவிக்கப்படுவதில்லையாயினும், அவர் எங்கு வைக்கப்படுகின்றார் என்பதை உறவினர் ஒருவாறு அறிந்து விடுகின்றனர்.

ஆயினும், 83 தொடக்கம் பாதுகாப்புப் படையினரால்

### 84 டிசம்பர் - 2 கைதுகள்

84 டிசம்பர் 2ல் செட்டிகுளம் ஆஸ்பத்திரியிலிருந்து ஐ பரமநாதன், வே. சிவபாலசிங்கம், செ. கேதீஸ்வரன் ஆகிய மூவரும் ராணுவத்தினரால் கொண்டுசெல்லப்பட்டனர். அன்று சுமார் நூறு பேர்வரை கைதுசெய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் 'காணமற் போயினர்.

மேற் கூறப்பட்ட மூவரின் கைதை நேரில் பார்த்த ஒருவரின் சத்தியக்கடதாசி இது

''சம்பவ தினத்தன்று செட்டிகுளம் ஆஸ்பத்திரியில் வைத்து மூவரும் ராணுவத்தினரால் கைது செய்யப்படடதைப் பார்த்தேன். அன்று முழுநாள் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தமையால் மறுநாள் வவனியா' அரச அதிபருக்கு புகார் செய்தேன். அவர் ஈரப்பெரியகுளம், வவனியா கூட்டுப்படை முகாம் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டார். பின்னர் இம்மூவரின் கைது பற்றி ஆயுதப்படையினர் மறுத்திருப்பதாக அவர் எனக்குத் தெரிவித்தார்''

இன்னெரு சாட்சியின் சத்தியக் கடதாசி;

''சம்பவதினம்காலை 6 மணியளவில்ஜெயவீரசிங்கம் தனது வீட்டு முற்றத்தில்நின்றபோது பாதுகாப்புப்படையினர் முற்றத்தையடைந்து அவரைத் தாக்கியபின் தமது 'டரக்' இல் அவரைக் கொண்டு சென்றனர். சம்பவதினம் சேமமடுவிலிருந்து 27 பேர் படையினரால் தாக்கப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டனர்.

''4ம் திகதி வரை ஜெயவீரசிங்கம் விடுதலைசெய்யப்படாததால் ஏனையோரின் உறவினருடன் வவனியா அரச அதிபரிடம் புகாரிடச் சென்றேன்

'அரச அதிபர் 2ம் திகதியன்று மொத்தமாக 85 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அவர்கள் இன்னமும் உயிருடன் இருக்கின்றார்களா என்பது தமக்குச் சந்தேகமாகவுள்ளது எனவும் கூறினர்...''

சம்பவதினம் கைதான 'நாதன் கபே' முகாமையாளர் மற்றும் அந்த ஸ்தாபனத்தின் 3 ஊழியரின் உறவினரு கும் அரச அதிபர் இது போன்றே கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

### திரு. எல். ஏ. பிராங்க்ளின்

சேமமடுவில் தொழில்நுட்ப அதிகாரியாகக் கடமையாற்றிய திரு பிராங்க்ளின் (வயது 30) மணமானவர். இவரும் 2ம் திகதி அவரது அலுவலக ஊழியர்கள் பத்துப்பேருடன் கைது செய்யப்பட்டார் — அவரது தந்தையின் வாக்குமூலம்

''சேமமடு கைதுகள் பற்றி 4ம் திகதி நான் அறிந்தபோது வவனியா நீர்ப்பாசன பொறியியலாளருடன் தொடர்பு கொண்டு எனது மகனின் நிலை பற்றி விசாரித்தபோது அவரின் கைதும் ஊர்ஜிதமாகிறது......

''...... 4ம் திகதி நான் மீண்டும் நீர்ப்பாசனப் பொறியியலாளருடன் தொடர்பு கொண்டபோது அவர், தாம் இணைப்பதிகாரியுடன் தொடர்புகொண்டதாகவும் அப்போது படையினர் 2ம் திகதி சேமமடு செல்லவில்லை என இணைப்பதிகாரி தமக்குத் தெரிவித்ததாகவும் கூறினர்

''......இக்கைதுகள் பற்றிப் பல வேண்டுகோள்கள், கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டாலும் கைதுகள்பற்றி மறுப்புத் தெரிவிக்கப்பட்டதைத் தவிர வேறெதுவும் நடைபெறவில்லை. நேரடியாகச் சாட்சியங்கள் உள்ளபோது (இந்த) மறுப்புக்களை பொது அறிவுள்ள எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்......''

(நாளை தொடரும்)

---

பிரிட்டோரியாவில்—

## கொலைக்குற்றத்திற்காக மூவருக்கு தூக்குத்தண்டனை

பிறிட்டோரியா செப்.10

பிறிட்டோரியாவில் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட ஆபிரிக்கத் தேசிய காங்கிரசை சேர்ந்த மூன்று பேருக்கு நேற்று தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

இவர்களில் ஒருவருக்கு வர்த்தக ஸ்தாபனம் ஒன்றின் மீது குண்டு வீசித் தாக்குதலை மேற்கொண்டமைக்காக தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது மேற்படி இடம்பெற்ற குண்டு வீச்சுச் சம்பவத்தில் ஐந்துபேர் பலியானர்கள்.

ஏனைய இருநபர்களுக்கும், ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரை கொலை செய்தார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

[எ]

---

ஜெனரல் வைத்தியா—

## படுகொலை தொடர்பாக ஆறு பேர் கைது

புதுடில்லி, செப். 10

இந்தியாவின் முன்னுள் இராணுவத்தளபதி ஜெனரல் ஏ. எஸ். வைத்தியாவின் படுகொலை சம்பந்தமாகச் சந்தேகத்தின் பேரில் ஆறுபேர் மகாராஷ்ரா மாநிலத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் இருவரிடமிருந்து இரண்டு கைத்துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன. இவர்கள் இருவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த மாதம் 10-ம் திகதி இடம்பெற்ற ஜெனரல் வைத்யாவின் கொலை இந்தியாவைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது தெரிந்ததே.

---

## அடுத்தமாதம் இந்தியப்பிரதமர் நியூசிலாந்து செல்வார்

லண்டன், செப். 10

இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அடுத்தமாத நடுப்பகுதியில் நான்கு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நியூசிலாந்து செல்லவுள்ளார்.

இத்தகவலை நியூசிலாந்துப் பிரதமர் திரு. டேவிட் குவாங்கே வெளியிட்டார். மேற்படி இந்தியப் பிரதமரின் விஜயத்தின்போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. சிவ்சங்கரும் கலந்து கொள்வார்.

இந்தியப் பிரதமரின் நியூசிலாந்து விஜயத்தின்போது, இருவல்லரசு நாடுகளிடையேயான உறவுநிலை குறித்தும், தென்னபிரிக்க நாடுகளின் நிலைமை குறித்தும் நியூசிலாந்துப் பிரதமர் திரு. டேவிட் லொங்கேயுடன் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [எ]

---

## மத்திய, வேம்படிக்கல்லூரி வகுப்புகள் வழமைபோல்

யாழ்ப்பாணம், வியா.

யாழ் மத்திய கல்லூரியும் யாழ்வேம்படிமகளிர்உயர்தரப் பாடசாலையும் முன்னர் அறிவித்திருந்தபடி நேற்று முன்தினத்திலிருந்து நடைபெறுகின்றது.

யாழ் நகரில்ஷெல் தாக்குதல் நடைபெற்ற போதிலும் மாணவர்கள் வருகை இரு பாடசாலைகளிலும் கணிசமானளவு காணப்பட்டது.

நேற்று வழமைபோல ஆசிரியர்களும் மாணவர்களும் வந்திருந்தனர்

யாழ். மத்திய கல்லூரி தொடர்ச்சியாக நடைபெறும் என அதிபர்திரு. வே பாலசுந்தரம் தெரிவிக்கின்றார். இதே போன்றுவேம்படிமகளிர் பாடசாலையும நடைபெறும் என அதிபர்திருமதி. ராஜரட்ணம்தெரிவிக்கின்றார். (ச)

---


# சுந்தர்ஸன்

நவீன மின்சார உபகரணங்கள்,
மகாராஜாவின் எஸ்–லோன் பைப்புகள்,
உபகரணங்கள்,
மின்சார நீர் இறைக்கும் இயந்திரங்கள்,
நவீன மின் தூங்கு லாம்புகள், சுவர் லாம்புகள், மின் அடுப்புகள், மின் விசிறிகள்
ஆகியவற்றை

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் வியாபாரிகட்கு விசேட கழிவு வழங்கப்படும்.

வடமாகாணத்தில் மின்சார உபகரணங்கள் இறக்குமதி செய்து மிகவும் சகாயவிலையில் விற்கும்

ஒரே ஸ்தாபனம்

# சுந்தர்ஸன்

மத்திய சந்தை, மானிப்பாய்.

முக்கிய குறிப்பு!

எமக்கு வேறு எங்கும் கிளை ஸ்தாபனம் இல்லை என்பதை வாடிக்கையாளர்கட்கும், பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேம்.

C 4510

## அறிவித்தல்

இன்று தொடக்கம் மறு அறிவித்தல்வரை சகல வகுப்புகளும் நடைபெறமாட்டாது.

நிர்வாகி

**N. மகேந்திரன்,**
New Education Centre,
வட்டுக்கோட்டை [C 4552]



## அறிவித்தல்

வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபன

**விற்பனையாளர் முகவர் சங்கம்**

**பொதுக்கூட்டம்**

காலம்: 11-9-86 (வியாழக்கிழமை) காலை 10 மணி
இடம்: OLD PARK CHINESE RESTURANT
207, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

மேற்படி கூட்டத்தில் எரிபொருள் கொள்முதல், எரிபொருள் விற்பனை, விலைக்கட்டுப்பாடு என்பன பற்றி தங்கள் ஒவ்வொருவரது அபிப்பிராயங்களின் அடிப்படையில் ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபன விற்பனை முகவர்கள் யாவரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர்,
வடபிராந்திய பெற்றோலிய கூட்டுத்தாபன
[C 4521] விற்பனையாளர், முகவர் சங்கம்.



## விவசாய டிப்ளமோ
## [Dip. in Agric]

(ஒரு வருடகால விவசாய டிப்ளமோ)

போதிக்கப்படும் பாடங்கள்:

மிருக பரிபாலனம், பயிர்வேளாண்மை, பூங்கனியியல், பண்ணை பொறியியல் [ஆண்கள்] மனைப் பொருளியல் [பெண்கள்], பண்ணை முகாமைத்துவம்.

தகைமை:

க.பொ.த. [சாதாரணம்] அல்லது தே.க.பொ.த. பரீட்சை சித்தியடைந்திருப்பதுடன் 1-10-86 இல் 17—24 வயதுக்கும் இடைப்பட்டிருக்க வேண்டும்.

விருப்பமுள்ள இருபாலாரும் 1-10.86க்கு முன்

அதிபர்,

**யாழ்ப்பாணக் கல்லூரி**
**விவசாய நிறுவனம்**

மருதனமடம், சுன்னுகம்,

என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கலாம். [C4456]



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மனி ★ சவூதிஅரேபியா

கனடா, டென்மார்க், ஜேர்மனி, சவூதி ஆகிய நாடுகளுக்கு எமது மு வர் உங்களை நேரடியாக அழைத்துச் செல்வார். ஜேர்மனி செல்ல விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் இம்மாதம் நடுப்பகுதியில் (15-ம் திகதி பயணம் செய்யலாம். உடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு தச்சு, மேசன், விவசாயம், விதித்திருத்தம், ஆஸ்பத்திரி கிளினேஸ் ஆகிய பதவிகளுக்கு செல்லவிரும்புவோர்

16-ம் திகதிக்கு முன்பாக
உடன் தொடர்பு கொள்ளவும்
பாஸ்போட், பொண்ட் ஆகியனவும்செய்து தரப்படும்.

பஸ்வழி இல.
764, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

Branch:

**ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ்**
வங்களாவடி, வேலணை.

தொடர்பு:

**N. பாலா**

திருச்செல்வம்வீதி, கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில். [A 1321]


## இந்து இளைஞர் மின்னொளி ஏற்பாடு

யாழ்ப்பாணம், வியா.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி வருடாந்த மகோற்சவத்தையொட்டி தெல்லிப்பழை இந்து இளைஞர் மன்றத்தினர் ஆலயத்திலிருந்து காங்கேசன்துறை வீதியில் தெல்லிப்பழை சந்திவரை மின்சார ரியூப் வல்புகளை பொருத்தியுள்ளனர்.

மகோற்சவகாத்தில் மட்டுமல்மல்லாது தொடர்ந்து இந்த மின்சாரரியூப் வல்புகள் எரியுமென இந்து இளைஞர் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடங்களிலும் பார்க்க இவ் வருட மகோற்சவத்தை முன்னிட்டு பெருந்திரளான பக்தர்கள் தினமும் கூடுகிறார்கள் அங்கு உள்ளூர் உற்பத்திப் பொருட்களின விற்பனையும் கண்காட்சியும் இடம்பெற்றுள்ளன,

தினமும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் மகோற்சவ காலபூஜைகள் இரவு8மணிக்கு நடைபெறும் அர்த்த சாமப் பூஜை உற்சவத்துடன் முடிவடைகிறது. [வா]

## இன்றைய பலன்

மாதம்:- ஆவணி
திகதி:- 26 (1986-9-11)
கிழமை:. வியாழன்
திதி:- அட்டமி
பி இ. வரை
நக்ஷத்திரம்:- கேட்டை
பி. இ. வரை

மேடம்:- கடமையில் தடைகள் தோன்றும். பழைய நினைவுகள் துன்பத்தைக் கொடுக்கும். திடீர் பயணமும் ஏற்படலாம்.

இடபம்:- களஸ்திரச் சேர்க்கையுண்டு. காதலர் வாழ்வுப் பூனிக்கும். கடமையிலும் புதியநிலை தென்படும்.

மிதுனம்.- எதிலும் விரக்தி தோன்றும். சிறுவிபத்துக்குமிடமேற்படலாம் கடமையிலும் கவனம் வேண்டும்.

கடகம்:- தந்தையின்ஆதரவு தாராளமாகக்கிடைக்கு. அலங்காரங்கள் அணைக்கும். எதிலும் சமநிலை காணும்

சிங்கம்:- மனைச் சிறப்புமுண்டு, விலைபொருள் விருத்தியுடன் விருந்துக்குமிடமுண்டு வாகன நலனுமுண்டு

கன்னி:- மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமானதினம். சமயோசித நடவடிக்கை மூலம் வெற்றிகாணுவீர்கள். மகிழ்ச்சிகரமான தினம்

துலாம்:- நம்பிக்கை மோசடி நடக்கும். எண்ணிய காரியத்தடை மனப்போராட்டங்களும் அதிகரிக்கலாம், நிதானம் நன்று.

விருச்சிகம்:- ஏமாற்றம்தாக்கும் நண்பர்களும் காலைவாரி விடக்கூடும் பண நெருக்கடியும் தோன்றலாம்.

தனுசு:- தானிய விருத்தியுண்டு. தாரபுத்திர சுகமுமுண்டு, குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். சுமாரான தினம்.

மகரம்:- நடையில் தயக்கம் ஏற்படும். வீண்மனஸ் தாபங்களுக்கும்இடமுண்டு தொழில் நஷ்டம் உண்டு எதிலும்மன த்தி ..ம்வேண்டும்.

கும்பம்:- மாதுருவழியாலும் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறும். விவசாயிகள் நன்மையடைவர். இல்லச் சிறப்புமுண்டு

மீனம்:- புண்ணிய விருப்புக்களில் ஈடுபடுவீர்கள். புதிய தொழில் முயற்சிகளை மேற்கொள்ளுவீர்கள் எதிலும் நன்மை தென்படும்.

திருமலை
வே ரவீந்திரன்


## இன்று பாரதியார் நினைவுதினம்

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்



உழுவோம்......
உழைப்போம்......
உயர்வோம்......

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 மில்க்வைற் பார் சோப் மேலுறைகளை அனுப்பி அழகிய பாரதியார் ஸ்ரிக்கர் ஒன்றைப்பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்-யாழ்ப்பாணம், [A 1323]



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மன் ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம் மேற்கொள்ள அரிய வாய்ப்பு. செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

எதிர்வரும் 15-ம் திகதி அழைத்துச் செல்ல இருப்பதால் 15-ம் திகதிக்கு முன் பதிவுசெய்து கொள்ளவும்.

**குவைத், அபுதாபி, சவூதிஅரேபியா ஆகிய நாடுகளுக்கு வருமானம் பெற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.**

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் பாஸ்போட் பொண்ட், டிக்கட் என்பன செய்து கொடுக்கப்படும்

**GROUP ATLANTIC**

(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)

163, Hospital Road, Jaffna.

(A 1065)



## பிரயாண ஒழுங்கு

குவைத்-நஷனல் கிளீனிங் கம்பனி

(இரண்டாம் அறிவித்தல்)

| | |
|---|---|
| S தர்மராஜா | H 0490600 |
| N ஜெயசீலன் | H 0321797 |
| K. ரட்ணசிங்கம் | H 010?892 |
| V திய கநாயகலிங்கம் | H 0215936 |
| K A சிவராஜா | H 0474044 |
| G P தாமரைமணாளன் | H 046? 39 |
| A C அருள்தாஸ் | H 02?1546 |
| S இந்திரராஜா | H 0320080 |
| J A வலன்டீன் | G 0341780 |
| T S சிவதாசன் | H 0281339 |
| V S சேனதி | H 0244462 |
| A K கர்ணன் | H 0239180 |
| T செல்லன் | H 0 47126 |
| P S தேவராசன் | H 0106813 |
| K N இந்திரன் | H 0354027 |
| K A ஆனந்தராஜா | H 0240976 |
| R சேகர் | H 0419775 |
| A மோதிலால் மேரு | H 0483326 |
| V குணேந்திரலிங்கம் | J 0008842 |
| E P மாணிக்கம் | H 04 51 5 |
| J F பெர்னன்டோ | H 0291184 |
| S ரவிச்சந்திரன் | H 0??69?4 |
| S குழந்தைவேல் | H 0310680 |

மேற்குறிப்பிட்ட நபர்கள் உடனடியாக எமது காரியலயத்திற்கு வரவும். உங்கள் பிரயாணம் 15-09-86முன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

**யூனிவேசல் ஏஜென்சி**

125, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்-
(பெற்றோலியம் கூட்டுத்ஸ்தாபனத்துக்கு முன்பாக - ஆயுர்வேத கல்லூரி அருகாமை )

[A 1322]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வியாழக்கிழமை 11-9-86

# வடக்கு-கிழக்கு இணைப்பை கூட்டணி வலியுறுத்தும்

## சென்னையில் தகவல்

சென்னை, செப். 10 இனப்பிரச்னை தொடர்பாக இலங்கை அரசுடனான உடன்படிக்கையின் ஒருபகுதியாக வடக்கு, கிழக்கு இணைப்பை கூட்டணி வலியுறுத்தும்.

மேற்படி தகவலை கூட்டணியின் முக்கிய பிரமுகர் ஒருவர் சென்னையில் நேற்று பத்திரிகையாளர்மத்தியில் தெரிவித்தார்.

புதுடில்லியில் நடைபெறவுள்ள அடுத்தகட்டப் பேச்சுகளின்போதே வடக்கு, கிழக்கு தமிழ்ப் பகுதிகள் இணைப்பின் மீது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இலங்கை அரசுடனான பேச்சுக்கள் குறித்து கருத்துவெளியிட்ட அவர், இலங்கை அரசு முன்வைத்த கிழக்கு மாகாண மக்களின் கருத்தறியும் வாக்கெடுப்பு, எல்லைக் கமிஷன் அமைப்பு, இரு மாகாணங்களுக்குமான சாதனத் தொடர்பு ஏற்பாடு போன்ற ஆலோசனைகளைக் கூட்டணி ஏற்கும் நிலையில் இல்லை என்றும் அவர் மேலும் கூறினார். [எ]

## அகதிகள் குறித்து டென்மார்க் அரசின் திட்டம்

லண்டன், செப். 10 பெருந்தொகையான அகதிகள் டென்மார்க் நாட்டுக்குள் ஊடுருவுவதால் அதைக்கட்டுப் படுத்தும் நோக்குடன் டென்மார்க் அரசு, அகதிகள் வருவதை அனுமதிப்பதை ஒருவருட காலத்துக்கு நிறுத்தி வைக்க உத்தேசித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாதமொன்றுக்கு சுமார் இரண்டாயிரம் அகதிகள் டென்மார்க்குக்குள் வருவதாகவும் இவ்வாறு பெருந்தொகையான அகதிகள் வருவது டென்மார்க்கின் பொருளாதாரத்தை பாதிக்கும் வகையில் அமையும் என்று கருதுவதாலேயே மேற்படி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் டென்மார்க் பிரதமர் தெரிவித்துள்ளார். (எ)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியா. நேற்று நடைபெறவிருந்த சட்டத்தரணிகள் சங்கக் கூட்டம் பிறிதொரு தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. [ச]

## சரணாலயத்தில் மலைப்பாம்பு

[மானிப்பாய்] கந்தர்மடச்சந்தி பண்டிதர் சரணாலயத்தில் இப்போது புதிதாக ஒரு மலைப்பாம்பும் சேர்க்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த சரணாலயத்தில் இருந்து வந்த யானைக் குட்டி இறந்துபோயுள்ளது.

## பிக்குமாரின் உண்ணாவிரதம் மேற்கொள்ளக்கூட்டம்

கொழும்பு, புதன் அரசின் உத்தேச மாகாண சபைத்திட்டம் ரத்துச் செய்யப்படும்வரை நாட்டிலுள்ள அனைத்து பிக்குகளும் உண்ணாவிரதம் இருப்பது பற்றி முடிவெடுக்க மகாசங்கத்தின்கூட்டமொன்று எதிர்வரும் 21ம் திகதி நடைபெறவுள்ளது.

நேற்றுமுன் தினம் பௌத்த மகாசங்கத்தின் கூட்டம் அஸ்கிரிய பீடாதிபதி தலைமையில் நடைபெற்றபோதே இம்முடிவு எடுக்கப்பட்டது. அத்துடன் மகாசங்கம் பற்றி ஜனாதிபதி தெரிவித்த கருத்துகளுக்காக அவர்மன்னிப்புக் கோரவேண்டுமென இக் கூட்டத்தில் உரையாற்றிய அஸ்கிரிய பீடாதிபதி கோரினார். [ஊ]

## தமிழ் அகதிகள் விவகாரம்

# காப்டன் பின்டேல், இரு இலங்கையர் மீது வழக்கு

ஒட்டாவா, செப் 10 நியூ பவுண்லாந்துக் கரையோரத்துக்கப்பால் 155 தமிழ் அகதிகளை இறக்கிவிட்டது தொடர்பாக கனேடியப் பொலிசார் கப்பல் காப்டன் 'பின்டேல்' மற்றும் மேற்கு ஜெர்மனியில் உள்ள இரு இலங்கையர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கனடாவில் குடிவரவுச் சட்டத்தை மீறியதற்காக இந்த மூவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகக் கனேடிய பத்திரிகை 'ரொருன்டோ ஸ்டார்' தெரிவித்துள்ளது

இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள காப்டன் பின்டேல் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவர் மீது ஆயிரம் டாலர்கள் அபராதம் அல்லது ஆறுமாத சிறைத்தண்டனை அலலது இவையிரண்டும் சேர்த்து விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## மண்ணெண்ணை லீட்டர் ரூ. 10

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணத்திலுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்கள் சிலவற்றில் நேற்று மண்ணெண்ணை விற்பனை செய்யப்பட்டது. 1லீட்டர் 10ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

மண்ணெண்ணையை வண்டில் மூலம் விற்பனை செய்யும் வியாபாரிகள் யாழ்ப்பாணத்தில் வியாபாரத்தை நீண்டகாலத்துக்குப் பின் மேற்கொண்டுள்ளனர். [ச]

# "சிவில் யுத்தத்தினால் இதுவரை 15ஆயிரம்பேர்பலி"

## 10,000 பேர் தமிழராம்- அமைச்சர் ரொனி

கொழும்பு, புதன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றுவரும் சிவில் யுத்தத்தினால் இதுவரை சுமார் 15,000 பேர் கொல்லப்பட்டுள்ளனரென மதிப்பீடுகள் தெரிவிப்பதாக நிதி, திட்டமிடல் அமைச்சர் ரொனி டி மெல் கூறியுள்ளார்.

புலத்சிங்களவில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் இவர்களில் 10 ஆயிரம் பேர் தமிழரென்றும் மிகுதி 5 ஆயிரம் பேர் முப்படையினர் உட்பட சிங்களவர் என்றும் கூறினார் மேலும் சிவித யுதத்தில் 3 லட்சம் தமிழரும் 30 ஆயிரம் சிங்களவரும் அகதிகளாகியுள்ளதாகவும், நாட்டின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

ராணுவத்துக்கு மட்டும் வருடமொன்றுக்கு 10 கோடி ரூபாவுக்கு மேல செலவழிக்கப்படுவதாகவும் அவர் கூறினார். (கூ - ஊ)

## கோட்டையில் லொறி பாஸ் விநியோகம்

யாழ்ப்பாணம், புதன் யாழ்.கோட்டை இராணுவ முகாமில் யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்குச் செல்வதற்கான 'லொறி பாஸ்கள்' வழங்கப்பட்டன இப்பாஸ் நேற்று யாழ் கோட்டையில் சுமார் 60 லொறிகளுக்கு வழங்கப்பட்டது.

யாழ். கோட்டைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மண் மூடை அரண்கள் அகற்றப்படாதவரை லொறிகளுக்கான 'பாஸ்' வழங்கப்படமாட்டாதென உத்தியோகப்பற்றற்ற முறையில் இராணுவத்தினர் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ச)

## மட்டு விமான நிலைய பாதுகாப்பு தீவிரம்

(மட்டக்களப்பு நிருபர்) மட்டக்களப்பு விமான நிலையச் சுற்றுடலில் நேற்றுக்காலை முதல் ஆயுதப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்காக இந்த மாவட்டத்திலுள்ள பல்வேறு ஆயுதப் படையினரின் முகாம்களிலிருந்தும் வேறு இடங்களிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான அதிரடிப்படையினரும் இராணுவத்தினரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

### மகா வித்தியாலயம் மூடப்பட்டது

மேற்படி விமான நிலையத்துக்குச் சமீபமாக உள்ள புதூர் மகாவித்தியாலயம் நேற்றுக் காலை மூடப்பட்டு அங்கு இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். [மா]

## யாழ்ப்பாணத்துக்கு

# விறகு விநியோகம்செய்ய ஒப்பந்தகாரர் மறுப்பு

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணத்துக்கு சென்ற புதன்கிழமையிலிருந்து விறகுகள் கொண்டு வரப்படவில்லை. இதனால் யாழ்ப்பாணத்தில் விறகுத் தட்டுப்பாடு ஏற்படும் அறிகுறி தோன்றுகிறது.

மரக்கூட்டுத்தாபனத்தில் விறகு கொண்டு வருவதற்காகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் யாழ்ப்பாணத்துக்கு விறகுகொண்டு வருவதற்குத் தம்மால் ஏன் முடியாதுள்ளதென்பதனையிட்டு நேற்று யாழ் அரசாங்க அதிபரைச் சந்தித்து விபரமாக முறையிட்டுள்ளனர்.

யாழ்ப்டாணத்தில் விறகு கொண்டு வருவதற்கு 50 பேர் வரை பதிவு செய்யப்பட்டவர்கள் உள்ளனர். இவ்வாறு பதிவு செய்யப்பட்ட லொறிச் சொந்தக்காரர்களில் தற்சமயம் 25 பேர் தான் விறகு கொண்டு வரும் வேலையைச் செய்து வந்தனராம்

இவர்கள் விறகு கொண்டு வரும் சமயம் தமக்கு ஏற்படும் சில நடவடிக்கைகள் காரணமாகத் தம்மால் விறகு கொண்டுவரும் தொழிலைச் செய்ய முடியாதுள்ளது என்றும் அதனை நீக்கும் படியும் யாழ். அரச அதிபரிடம் முறையிட்டுள்ளனர். (ச)

## பீரங்கிப்படை வீரர்கள் மீது கொள்ளைக் குற்றச்சாட்டு

கொழும்பு, புதன் இலங்கை இராணுவத்தின் பீரங்கிப் படையைச் சேர்ந்த 3 இராணுவ வீரர்கள் மீது கொள்ளைக் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பிறியந்த, சோமபால, உபாலி ஆகிய மூவருமே இந்த இராணுவச் சந்தேக நபர்களாவர்.

பொரளையிலுள்ள வீடொன்றையுடைத்து இரண்டு லட்சத்து 52 ஆயிரம் ரொக்கம் உட்பட நகை, மற்றும் ஆபரணங்களை இவர்கள் கொள்ளையடித்ததாகக் கறுவாக்காட்டு பொலிஸார் இம் மூவர் மீதும் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்

பிரஸ்தாப வீட்டினுள் புகுந்த இம் மூவரும் அவ்வீட்டின் பணியாளை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி பொருட்களைக் கொள்ளையிட்டுச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு பிரதம நீதிபதி திரு. கொலின் அமரசிங்க முன்னிலையில் சந்தேக நபர்கள் ஆஜராக்கபபட்டனர்.

## 'ஈழம் ரைம்' ஆங்கில பத்திரிகை

வல்வெட்டித்துறை, புதன் யாழ்ப்பாணத்தில் இன்னுமொரு ஆங்கிலப் பத்திரிகை வெளிவந்துள்ளது. 'ஈழம் ரைம்'' என்ற பெயரில் இப் பத்திரிகை வெளியிடப்பட்டுள்ளது.

மாதம் இரு முறை வெளியிடப்படவுள்ள இப் பத்திரிகையின் முதலாவது பிரசுரம் தற்சமயம் விநியோகிக்கப்படுகிறது. விலை இரண்டு ரூபாவாகும்.

வல்வெட்டித்துறையில் பிரசுரமாகி ஆங்கிலப் பத்திரிகை வெளிவருவது இதுவே முதன் முறையாகும்.

# முக்கியஸ்தர்களின் படங்கள் 'ஷெல்' அடியில் சேதம்

யாழ்ப்பாணம். வியாழன். யாழ் மத்திய கல்லூரியில் நூற்றைம்பது வருடங்களாகப் பாதுகாக்கப்பட்டுவந்த கல்லூரி ஸ்தாபகர்கள், முன்னாள் அதிபர்கள் ஆகியோரின் உருவப்படங்கள் யாழ். கோட்டை இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி உடைந்து நொருங்கியுள்ளன.

நேற்று முன் தினமிரவு யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட 'ஷெல்' யாழ். மத்திய கல்லூரி மூன்றும் மாடிக் கட்டிடத்தில் விழுந்து வெடித்தது.

அத்துடன் இம்மாடியிலிருந்த தளபாடங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் சேதமாகியுள்ளன.

இக் கல்லூரியின் முன்னாள் அதிபரான ஏ.இ தம்பர் பெயரில் வீதியோரமாக உள்ள மாடிக் கட்டடமே இவ்வாறு சேதத்துக்குள்ளான கட்டிடமாகும். (ச-ஒ)

## பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வியாழன். யாழ். மறுமலர்ச்சிக்கழகமும் மாணவர் முன்னணியும் இணைந்து நடாத்தும் பொருட்காட்சி யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி (சென். பற்றிக்ஸ்)யில் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 3 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இப்பொருட்காட்சி தினசரி காலை 8-30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் இந்த பயனுள்ள பொருட்காட்சி மக்களின் எதிர்காலத்தை வளம் படுத்துவதாக அமையுமெனத் தெரிவிக்கப்படுகிறது: (மா)

## இறுதி அஞ்சலி

யாழ்ப்பாணம், வியாழன். மக்களைக் காக்க வீரமுடன் போரிடுவதில் முன்னின்ற தோழனை இழந்துவிட்டோம். இத்துயரை தாங்க முடியாத போதும் தொடர்ந்தும் மக்கள் விடுதலைக்காகப் போராடுவோம்'' என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப்படை வீரனாக இருந்து நேற்று மரணமான போலின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய மூ. டேவிற்சன் தெரிவித்தார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தமிழீழ இராணுவம் ஆகிய இயக்கப் பிரதிநிதிகளும் பெரும் தொகையான மக்களும் போலின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். [ரா]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 11-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.